## செப்டம்பர் - 18 - திங்கள்

### முதல் வாசகம்: 1 திமோத்தி 2 : 1 – 8

சகோதர சகோதரிகளே! அனைவருக்காகவும் மன்றாடுங்கள் இறைவனிடம் வேண்டுங்கள் பரிந்து பேசுங்கள் நன்றி செலுத்துங்கள். முதன்முதலில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே.இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய், தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக் காகவும், உயர் நிலையிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுங்கள்.இதுவே நம் மீட்பராகிய கடவுளின்முன் சிறந்ததும் ஏற்புடையதுமாகும். எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்.ஏனெனில் கடவுள் ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசு கிறிஸ்து என்னும் மனிதர்.அனைவரின் மீட்புக்காக அவர் தம்மையே ஈடாகத் தந்தார் குறித்த காலத்தில் அதற்குச் சான்று பகர்ந்தார். இதற்காகவே நான் நற்செய்தியை அறிவிப்பவனாகவும் திருத்தூதனாகவும் விசுவாசத்தையும் உண்மையையும் பிற இனத்தாருக்குக் கற்பிக்கும் போதனைகனாகவும் ஏற்படுத்தப்பட்டேன். நான் சொல்வது உண்மையே பொய் அல்ல.எனவே, ஆண்கள் சினமும் சொற்பூசலும் இன்றி எவ்விடத்திலும் தூய உள்ளத்தோடு கைகளை உயர்த்தி இறைவேண்டல் செய்யுமாறு விரும்புகின்றேன்.

**பதில்பாடல் :** என் கெஞ்சும் குரலுக்குச் செவிசாய்த்த ஆண்டவர் போற்றி போற்றி

### நற்செய்தி : லூக்கா7 : 1 – 10

அக்காலத்தில் இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றார். அங்கே நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளர் ஒருவர் நோயுற்றுச் சாகும் தறுவாயிலிருந்தார். அவர்மீது தலைவர் மதிப்பு வைத்திருந்தார். அவர் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு யூதரின் மூப்பர்களை அவரிடம் அனுப்பித் தம் பணியாளரைக் காப்பாற்ற வருமாறு வேண்டினார். அவர்கள் இயேசுவிடம் வந்து, ”நீர் இவ்வுதவி செய்வதற்கு அவர் தகுதியுள்ளவரே. அவர் நம் மக்கள் மீது அன்புள்ளவர். எங்களுக்கு ஒரு தொழுகைக்கூடமும் கட்டித் தந்திருக்கிறார்” என்று சொல்லி அவரை ஆர்வமாய் அழைத்தார்கள். இயேசு அவர்களோடு சென்றார். வீட்டுக்குச் சற்றுத் தொலையில் வந்துகொண்டிருந்தபோதே நூற்றுவர் தலைவர் தம் நண்பர்கள் சிலரை அனுப்பிப் பின்வருமாறு கூறச் சொன்னார் ”ஐயா, உமக்குத் தொந்தரவு வேண்டாம் நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். உம்மிடம் வரவும் என்னைத் தகுதியுள்ளவனாக நான் கருதவில்லை. ஆனால் ஒரு வார்த்தை சொல்லும் என் ஊழியர் நலமடைவார். நான் அதிகாரத்துக்கு உட்பட்டவன். என் அதிகாரத்துக்கு உட்பட்ட படை வீரரும் உள்ளனர். நான் ஒருவரிடம் ”செல்க” என்றால் அவர் செல்கிறார் வேறு ஒருவரிடம் ”வருக” என்றால் அவர் வருகிறார். என் பணியாளரைப் பார்த்து ”இதைச் செய்க” என்றால் அவர் செய்கிறார்.” இவற்றைக் கேட்ட இயேசு அவரைக்குறித்து வியப்புற்றார். தம்மைப் பின்தொடரும் மக்கள்கூட்டத்தினரைத் திரும்பிப் பார்த்து, ”இஸ்ரயேலரிடத்திலும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை என உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அப்பணியாளர் நலமுற்றிருப்பதைக் கண்டார்கள்.

**தியானம்:** நாம் வாழும் இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் கடவுள் மீது ஒரு பொதுவான விசுவாசத்தோடு பிறக்கின்றான். காலப்போக்கில் அவன் மனம் போன போக்கின்படி வாழ ஆசைப்படும் ஒருசிலர், கடவுள் கொள்கையை மறுதலித்து வருகின்றார்கள். ஆனால் கிறிஸ்தவர்களாக பிறந்த ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டுள்ளோம். எமது வழிபாட்டிலும் சரி எமது செபங்களிலும் சரி நாம் எல்லோருக்காகவும் செபிக்க வேண்டும் என்று இன்றைய முதல் வாசகம் கூறுகின்றது. இயேசுவின் போதனைகளைக் கேட்டு மன அமைதி பெற்றவர்கள் பலர், குணம் பெற்றவர்கள் பலர் ஆனால் குறிப்பிட்ட ஒருசில மனிதர்கள் மட்டுமே இயேசுவினால் வியப்புடன் உற்று நோக்கப்பட்டார்கள். அவர்களில் இன்றைய வாசகத்தில் நூற்றுவத் தலைவனும் ஒருவராவர். “ஒரு வார்த்தை சொல்லும் என் ஊழியன் குணமடைவான் என்று இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவராயிருந்தார். கடவுள் நாம் அவரோடு உறவாடுவதை விரும்புகின்றார். எவ்வாறு பெற்றோர்கள் தம் பிள்ளைகள் தம்மோடு உறவாடுவதை விரும்புகின்றார்களோ அதைவிட மேலாக இறைவன் தம்மோடு உறவாடுவதை விரும்புகின்றார். எமது செபங்களில் எமக்காக மட்டும் செபிக்காது ஏனையவர்களுக்காகவும் செபிக்கும் பொழுது இறைவனால் ஆசீர்வதிக்கப்படுவோம் என்பதை நாம் உணர வேண்டும். வாழ்க்கைப் பாதையில் வீசிடும் தென்றல்கூட புயலாக மாறிடும் நிலைகள் உருவாகலாம். செபத்தில் நாம் நிலைத்திருப்போமேயானால் எந்தப் புயலும் எம்மை நெருங்காது. இறைவன் காத்தருள்வார் என்பதை எம்மனத்தில் முன்நிறுத்துவோம்.